# அரசியல் விஞ்ஞானம்



# political Science

## அணுகுமுறைகள் ஓர் மதிப்பீடு


தொகுப்பாக்கம் :ற.அ.அஹ்சன்

learn to Student OF politics

Department Of Political Science ,SEU

# தத்துவார்த்த அணுகுமுறை

- மிகவும் பழமையான நீண்டகால நிலைப்பினை உடைய அணுகுமுறையே இதுவாகும்.
- கற்பனையில் ஒதிக்கும் அரசியல் நிலையினை ஆராய்வதே தத்துவார்த்த அணுகுமுறையாகும்
- இவ்வணுகுமுறை ஊகங்களிலும் கருதுகோள்களிலும் முனவகுக்கப்பட்ட கோட்பாடுகளிலும் தங்கியுள்ளது.
- இது எடுகோள்களின் தளத்தில் தங்கியுள்ளது
- நிச்சயவாதத் தளத்திலிருந்து பெறுமதிகளை அடைகிறது.
- கற்பனைக்கு முக்கியத்துவம் அளிப்பதால் நடைமுறை நிலையினை ஆராய்வதில்லை.
- இதனால் யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டதாக காணப்படுகிறது.
- உலகம் பற்றிய அடிப்படை வினாக்களை எழப்பி பரிசீலனை செய்கிறது.
- அரசியல் பற்றி அடிப்படை வினாக்களை எழுப்பி பரிசீலனை செய்கிறது..
- இறுதி இலக்கை முதலில் தீர்மனனித்து விட்டு அதனை அடைவதற்கான வழிமுறைகளை பின்னர் விபரிக்கிறது.
- பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்ற கிரேக்க சிந்தனையாளர்களால் கையாளப்பட்டது.

- ஏனைய பெயர்கள் : மெய்யியல் அணுகுமுறை, நியமம்சார் அணுகுமுறை, இலட்சியவாத அணுகுமுறை, ஒழுக்கவியல் அணுகுமுறை, மனோதத்துவ அணுகுமுறை

# ஒப்பீட்டு அணுகுமுறை

- இது ஒரு பழமையான அணுகுமுறையாகும்.
- இங்கு ஒப்பீடு என்பது தொடர்புபடுவது என பொருள்படுகிறது.
- உலகிலுள்ள அரசியல முறைமைகள், அரசியல் நிறுவனங்களை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு ஆராய்வதே ஒப்பீட்டு அணுகுமுறையாகும்.
- இது தத்துவார்த்த அணுகுமுறை போலன்றி யதார்த்தத்தை விளக்குவதாக அமைந்துள்ளது.
- ஒப்பீட்டரசியல் எனும் கற்கை நெறி வளர்ச்சியடைய காரணமாக அமைந்துள்ளதுஇ
- இது பழமை ஒப்பீடு , 20ம் நூற்றாண்டின் ஒப்பீடு , சமகால ஒப்பீடு என 03 வகைப்படுகினறது.
- புழமை ஒப்பீடு என்பது கிரேக்க, உரோம கால சிந்தனையில் பயன்படுத்தப்பட்டது. இதற்கு எடுத்துக்காட்டாக அரிஸ்டோட்டில் என்பவர் 150 க்கு மேற்பட்ட நாடுகளின் அரசியல் யாப்புக்களை ஒப்பிட்டுக்கு ஆய்வுக்கு பயன்படுத்தியமையை குறிப்பிடலாம்.

- 20ம் நூற்றாண்டின் ஒப்பீடு என்பது 1960 களின் பின் அமேரிக்காவில் விஞ்ஞான ரீதியான பிண்ணனியில் விருத்தி கண்டதாகும். இங்கு அரசியல் யாப்புக்கள், வரலாறுகளை ஒப்பிடமால் அரசியல் கலாச்சாரம், அரசியல் அபிவிருத்தி, அரசியல் நவீனத்துவம் போன்ற கருப்பொருள்களை மையமாகக் கொண்டு ஒப்பீடு இடம்பெற்றது.
- நவீன ஒப்பீடு என்பது நெகிழ்ச்சித் தன்மை பொருந்தியது. இங்கு அரசியல் நிறுவனங்கள், அரசியல் மாற்றங்கள், மனித உரிமைகள், சமாதான செயன்முறைகள் என்பன இங்கு ஒப்பீடு செய்யப்படுகின்றது.
- இவ்வணுகுமுறை யதார்தத்தினை, பரந்த பாடப்பரப்பினை தேடுவதாக உள்ளது.

# பல்துறையிடை அணுகுமுறை

- இது ஒரு நவீன அணுகுமுறையாகும்.
- அரசறிவியல் ஒரு தனியான பாடத்துறை அல்ல. அது காலத்துக்குக் காலம் ஏனைய பாடங்களுடன் தொடர்புபட்டு வளர்ச்சியடைந்து வந்துள்ளது.
- அந்தவகையில் அரசறிவியல் கற்கையில் அது சாராத ஏனைய பாடங்களின் கோட்பாடுகள் , எண்ணக்கருக்களை பயன்படுத்துவதே பல்துறையிடை அணுகுமுறையாகும்.
- அரசறிவியல் ஆய்வுகள் முழுமை பெறவும், அரசறிவியல் காலத்துக்குக் காலம் பயணிக்கும் புதிய தன்மையை பெறவும் இவ்வணுகுமுறை உதவுகின்றது.
- அந்த வகையில் கிரேக்க காலத்தில் அரசறிவியல் ஆய்வுகளுக்கு தத்துவம் உதவியது.
- உரோம காலத்தில் இறையியல்வாதம், வரலாறு, சட்டம் போன்ற பாடங்களும்,
- மத்திய காலத்தில் பொருளாதாரம், வரலாறு, சட்டவியல் போன்ற பாடங்களும்
- நவீன காலத்தில் சமுகவியல், உளவியல், புவியியல், கலை, இலக்கியம் போன்ற பாடங்கள் அரசறிவியல் ஆய்வுகளுக்கு உதவுகின்றது.
- எனினும் அரசறிவியலின் தனித்துவம் இழக்கப்பட காரணமாக இவ்வணுகுமுறை உள்ளது.

# அரசியல் பொருளாதார அணுகுமுறை

- அரசியலை பொருளாதார நோக்கில் ஆராயும் அணுகுமுறையே அரசியல் பொருளாதார அணுகுமுறையாகும்.
- இவ்வணுகுமுறையானது பொருளாதார காரணிகளால் தான் அரசியலை தீர்மானிக்க முடியும் எனக் குறிப்பிடுகின்றது
- இது ஒரு நவீன அணுகுமுறையாகும்.
- அரசியல் பொருளாதார அணுகுமுறையானது 19ம் நூற்றாண்டு காலப்பகுதியில் அறிமுகமாகிய மாக்ஸிஸ கோட்பாட்டின் அறிமுகத்தோடு அரசறிவியலில் முறையாக அறிமுகமானது.
- எனினும் அரசியல் பொருளாதார எண்ணக்கரு என்பது 18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் தோற்றம் பெற்றதாகும்.
- 18ம் நூற்றாண்டு காலப்பகுதிகளில் டேவிட் ரிகாடோ, தோமஸ் மல்தஸ், அடம்ஸ்மித் போன்ற அறிஞர்கள் இவ் எண்ணக்கருவினை கையாண்டுள்ளனர்.
- எனினும் இச்சம்பிரதாயத்தின் காரணகருத்தாவாக கால்மாக்ஸினை குறிப்பிட முடியும்.
- அரசியலுக்கும் பொருளாதாரத்திற்குமிடையிலான தொடர்பினால் அரசியல் பொருளாதாரம் எனும் கற்கை நெறி தோற்றம் பெற்றுள்ளது.
- இவ்வணுகுமுறையானது உற்பத்தி , வர்த்தகம், தேசிய வருமானம் போன்ற பொருளாதார செயன்முறைகள் அரசாங்க கொள்கைகளோடு தொடர்புபடும் விதத்தையும் மாறாக அரசாங்க கொள்கைகள் இப்பொருளாதார செயன்முறைகளில் செல்வாக்கு செலுத்தும் விதத்தினையும் ஆராய்கின்றது.

# நடத்தைவாத அணுகுமுறை

- ✓ இது ஒரு நவீன அணுகுமுறையாகும்
- ✓ மனிதனுடைய நடத்தைகளை விஞ்ஞான நுட்பமுறைகளை பயன்படுத்தி ஆராயும் அணுகுமுறையாகும்.
- ✓ நடத்தைவாதம் பற்றிய ஆய்வானது 20ம் நூற்றாண்டின் முதலாம் அரைப்பகுதியில் அறிமுகமானதுடன் அரசறிவியலில் பிரபல்யமான ஒன்றாக இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் மாறியது.
- ✓ ஆரம்பகாலத்தில் மேற்கொள்ளப்பட்டது போல் அரசியல் நிறுவனங்களையோ, அரசியல் அபிவிருத்திகளையோ ஆராயாமல் அரசியலில் பங்கு கொள்ளும் மனிதனுடய அரசியல் நடத்தைகளை ஆய்வு செய்ய வேண்டும் கருத்து மேலோங்கியதன் பிறப்பாடு தோற்றம் பெற்ற அணுகுமுறையே இதுவாகும்.
- ✓ நடத்தைவாதம் பற்றிய ஆய்வானது அமேரிக்காவினை மையமாகக் கொண்டது. இந் நடத்தைவாதத்தின் தந்தையாக சார்ள்ஸ் ஈ மெரியம் காணப்படுகிறார். தவிர டேவிட் ஆப்டர், டேவிட் ருமன் போன்ற அறிஞர்களும் இந்நடத்தைவாதத்திற்கு பங்களிப்பை வழங்கியவர்களாவர்.
- ✓ இங்கு கற்பனைக்கு இடமளிக்கப்படமாட்டாது.
- ✓ இது விளைவுகளை விட பயன்படுத்தப்படும் நுட்பங்களிலே கவனம் செலுத்துகின்றது.
- ✓ இது சிற்றின விடயங்களையே ஆராய்கின்றது. ( மாணவர் போராட்டங்கள், வகுப்புவாத போரட்டங்கள் )
- ✓ இந்நடத்தைவாத அணுகுமுறையினது வருகையினால் அரசியல் விஞ்ஞானமாக மாறியதுடன் பல கோட்பாடுகள் , எண்ணக்கருக்கள் சேர்க்கப்பட்டு அரசறிவியலின் பாடப்பரப்பு அதிகரித்தது

# சமூகவியல் அணுகுமுறை

- அரசியலை சமூதளத்தின் ஊடாக ஆராயும் அணுகுமுறையே சமூகவியல் அணுகுமுறையாகும்.
- இது ஒரு நவீன அணுகுமுறையாகும்.
- இங்கு சமூகம், சமூக குழுக்கள், சமூக நிறுவனங்கள் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன. இதனை ஆராய்வதன் மூலம் அரசியலை விளக்கும் அணுகுமுறையே இதுவாகும்.
- சமூகவியலின் தந்தையாக ஒகஸ்ட் கொம்டே என்பவர் நோக்கப்படுகிறார்.
- அரசியலுக்கும் சமூகவியலுக்குமிடையிலான தொடர்பின் விளைவாக உருவான துறையே அரசியல் சமூகவியலாகும்.
- இது தமது ஆய்வுகளில் நேரடி அவதானிப்பு, நேர்காணல், வினாக்கொத்து மாதிரி , விடய ஆய்வு, போன்ற விஞ்ஞான நுட்பமுறைகளை பயன்படுத்துகின்றது.
- இது சமூக அம்சங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பதால் அரசியலோடு தொடர்பான ஏனைய விடயங்களில் தவறிவிடுகின்றது



**- ஒகஸ்டே கொம்ட்**

# பெண்ணியல்வாத அணுகுமுறை

- இது ஒரு நவீன அணுகுமுறையாகும்.
- பெண்களுக்கும் அரசியலுக்குமிடையிலான தொடர்புகளை அடிப்டையாகக் கொண்டு அரசியலை விளக்கும் அணுகுமுறையே பெண்ணியல்வாத அணுகுமுறையாகும்.
- பெண்கள் அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்றுவதன் அவசியத்தை முன்னிலைப்படுத்தி அவர்களை அரசியலில் பங்குபற்ற வைக்கும் நோக்குடன் முன்வைக்கப்பட்டதாகும்.
- பெண்களின் அரசியல் ஆளுமைகளையும் ஆற்றல்களையும் சமுதாயத்திற்கு பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் இது முன்வைக்கப்பட்டது.
- அரசியல் மற்றும் சமூகவியல் ஆய்வுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய பெண்ணியல்வாத கற்கை நெறி 1970 களில் மாற்றமடைந்தது. அத்தோடு அரசியல் என்ற எண்ணக்கருவின் பொருளையும் விருத்தி செய்தது.
- பெண்கள் தொடர்பான உரிமைகள் மீறப்பட்டமை, பெண்களுக்கெதிராக காலாகாலமாக நடைபெற்று வருகின்ற அநீதிகளே இவ்வணுகுமுறை தோற்றம் பெறுவதற்கு காரணமாகும்.
- இவ்வணுகுமுறையினால் பால்நிலை, ஆண. பெண்தொழிற்பிரிப்பு, ஆண்மையவாதம், பெண்விடுதலை, பெண் அடக்குமறை போன்ற எண்ணக்கருக்கள் அரசியல் , சமூக ஆய்வுகளுக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன
- இவ்வணுகுமுறையை முன்வைத்த அறிஞர்களாக கேத்மில்டன் , கிறைமன் கிறீன் , பாராசிமித் போன்ற அறிஞர்கள் காணப்படுகின்றனர்.